# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத ,, | ,, | 4-50 |
| 3 மாத ,, | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 13-ம் இல.


# பரி. தந்தையின் உத்தானதினச் செய்தி



உயிர்த்தஞாயிறு தினமன்று பரி. தந்தை தமது வத்திக்கான் மாளிகை வாசஸ்தலத்தின் யன்னலில் காட்சியளித்து, கிமே சம் பேதுரு தேவாலய சதுக்கத்தில் காத்திருந்த 200,000 மக்களை ஆசிர்வதித்து அவர்கள் மூலமாக உலக மக்களுக்குத் தமது ஈஸ்ரர் தினச் செய்தியை விடுத்தருளினார். அச்செய்தியில்பாப்பரசர் உலகில் அங்கிங்கு தோன்றியிருக்கும்சிறுயுத்தங்களை அகற்றி எங்கும் சமாதானம் நிலவச்செய்ய சகல மக்களையும் ஒத்துழைக்க வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளார். சமாதான பேச்சுக்கள் நடைபெறும் இடங்களில் முட்டுக்கட்டைகளாகத் தோன்றும் சில தடைகளை அகற்றிவிட இரந்துகேட்டருளினார். ஒழுங்கான பாதையைக் கடைப்பிடிக்க வாலிப மாணவர்களையும், நியாயமான சமூக நிலைமையை நிலைநாட்டத் தொழிலாளரையும், புண்ணிய பாதையில் மக்களை நடத்திச்செல்ல அரசியல் வாதிகளையும் அவர்பரிந்து விண்ணப்பித்து ஈஸ்ரர் சுபசோபனத்தைப் பதினாறு உலகபாஷைகளில் கூறி "நகரத்தையும், உலகத்தையும்" ஆசிர்வதித்தருளினார்.

## திருச்சபையின் குடும்பத்தன்மையை வற்புறுத்தினர் கருதினல் கூறே



"திருச்சபையை நாம் ஒரு முடியாட்சியாகவோ, சர்வாதிகாரமாகவோ, குருமார் அதிகாரமாகவோ எண்ணாது அதை ஒரு குடும்பமாக எண்ணுவதே தலைசிறந்தது" என்று கருதினல் கூறே அன்று கொழும்பு அக்குவைனஸ் கல்லூரியில் துறவறக் கன்னியர் சபையொன்றின் பட்டமளிப்பு விழாவில் கூறினார். ஒரு குடும்பத்திலுள்ள பலர் ஒருவரொருவருக்கு உதவியாய் இருப்பது போல, திருச்சபையிலுள்ள அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர்உதவியாக இருப்பதே முறையாகும் என்பதை வற்புறுத்திய கருதினலவர்கள் பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டினார். பிதாவாகிய சருவேசுரனும், சுதனாகிய சருவேசுரனும் ஒருவரை ஒருவர் நேசிப்பது போல நாமும் ஒருவர்மேல் ஒருவர் அன்புடையவர்களாக இருக்கவேண்டுமென்றும் கிறிஸ்துவ சீவியம் உண்மையான பரஸ்பர அன்பிலேயே தங்கியிருக்கிறதென்றும் அவர் விளக்கியருளினார்.

## கத்தோலிக்கரின் அரசியல் கட்சி என ஒன்றில்லை

சென்றவாரம் 'மெசெஞ்சர்' பத்திரிகையில் "கத்தோலிக்கரின் அரசியல் கட்சி" என ஒன்று இலங்கையில் இல்லை என்றும், எந்தக் கட்சியினையும் இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார் எவரும் அதிகாரமுறையில் ஆதரிக்கவில்லையெனவும், இதற்கு எதிராகவரும் எவ்வதந்தியும் உண்மையற்றது என்றும் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. தங்கள் தங்கள் மனச்சாட்சியின்படி தமது தேசத்துக்கும் சமூக நன்மைக்கும் தொண்டு புரியக் கூடிய அபேட்சகர்களுக்கு விசுவாசிகள்எவரும் தமது வாக்கை அளிக்கத் தயங்குவதற்கு இடமில்லையென மேலும் அப்பத்திரிகை பொதுவாகக் கூறியிருக்கின்றது.

## ஜெருசலேம் நகரில் பரிசுத்தவாரக் கொண்டாட்டம்

மத்தியகிழக்கில் நிலவிவரும் யுத்தநிலைமை ஜெருசலேம் நகரில் நடைபெற்ற பரிசுத்த வாரக் கொண்டாட்டங்களை எவ்விதத்திலும் பாதிக்கவில்லையென்று செய்திகள் கூறுகின்றன. பெரியவியாழன் தொடக்கமாக உயிர்த்தஞாயிறுவரை கொண்டாட்டங்கள் உச்சநிலைஅடைந்து வந்தன. ஒரே தேவாலயத்தில் பல கிறீஸ்தவ சபைகளும் வெவ்வேறு பகுதிகளிலும், வெவ்வேறு நேரங்களிலும் திருச்சடங்குகளும் ஊர்வலங்களும் நடத்தித் தேவ ஆராதனைகளில் பங்குபற்றிக் கொண்டனர். கத்தோலிக்க கிறீஸ்தவர்களின் ஆராதனைகளை 80 வயதுக்கு மேற்பட்டவராகிய இலத்தின்முறைப் பிதாப்பிதா அல்பேட்டோ கோறி அடிகளார் தலைமை தாங்கித் திரளான மக்கட் கூட்டம் பங்குபெற நடத்தி வைத்தார்.

## அன்பே கிறீஸ்துவம்

உலக கிறீஸ்தவ சபையினரின் முயற்சியால் கொழும்பில் கோட்டை மத்தியநிலையத்திலுள்ள புனித பேதுருவானவர் தேவாலயத்தில் வேலைநாட்களில் மத்தியான போசன வேளையின்பின் சில நிமிடங்களுக்குவிரும்பியோர் பங்கு பெற்றுக்கொள்ள சிறு உபந்நியாசங்கள் நடைபெறுகின்றன. பல கிறீஸ்தவசபைகளுக்குரியோர் பேச்சாளர்களாக அழைக்கப் படுகின்றனர். பெரியவாரத்தின்போது கத். குருவானவராகிய இயூறியா கோன் சுவாமியார் அழைக்கப் பட்டிருந்தார். அவர் ஆற்றிய சிறுஉரையில் கிறிஸ்துவம் என்பது மக்கள் ஒருவர் ஒருவர்மேலுள்ள உண்மையான அன்புதான் என எடுத்துக் காட்டினார். புனித சடங்குகளில் பங்கு பெறுவதில் மாத்திரமன்று; ஒருவர் ஒருவருக்கு உதவியாயிருப்பதே கிறீஸ்துவம்என அடிகளார் விளக்கினார்.

## ரொடீசியா மேற்றிராணிமாரின் துணிவான முடிவு

ரொடீசியா தேசத்தின் இனஒதுக்கக் கொள்கைக்கு அங்குள்ள கத்தோலிக்க மேற்றிராணிமார் யாவரும் தெட்டத்தெளிவாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். கத்தோலிக்க மேற்றிராணிமாருடைய முடிவை மறு கிறீஸ்தவ சபை அதிகாரிகளும் ஆதரித்துள்ளனர். ஐக்கியநாடுகள் சபையைச்சேர்ந்த பெரும்பாலான தேசங்களின் எதிர்ப்பை ஏற்கனவே பெற்றிருக்கும்பிரதமர்சிமித்தின் அரசாங்கத்துக்கு எதிராகக் கிறீஸ்தவ சபைகளின் ஏகோபித்த எதிர்ப்புப் பாரதூரமான விளைவைக் கொண்டுவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்றவாரம் ரொடீசியாதேச கத்தோலிக்க தேவாலயங்கள் யாவற்றிலும் மேற்றிராணிமார் சங்கத்தின்முடிவு பகிரங்கமாக வாசிக்கப்பட்டு வேதபோதக வேலைக்கு அந்நாட்டின் புதுச்சட்டங்கள் எவ்வாறு முட்டுக்கட்டையாயிருக்கின்றன என விளக்கப் பட்டது.

## இரண்டாவது கம்யூனிஸ்த நாடு

உலகிலுள்ள கம்யூனிஸ்த நாடுகளிலே வத்திக்கானில் தனது ஸ்தானிகர்ஒருவரைக் கொண்டுள்ள ஒரேயொருநாடு கியூபா மட்டுமே. சமீபகாலத்திலே இரண்டாவது கம்யூனிஸ்நாடாய்— ஐரோப்பாவில் முதலாவதாய்— யூகோசிலேவியா தனது ஸ்தானிகர் ஒருவரைக் கொண்டிருக்கும் போல் இருக்கிறது. இற்றைக்கு மூன்றுவருடங்களின் முன் வத்திக்கானுடன் அது இராசியஉறவுபூண்டு ஒன்றுக்கொன்று தத்தம் விசேட பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. தற்போது இந்தஇராசியஉறவில் ஏற்பட்டிருக்கும் திருத்தம் காரணமாக இரண்டும் தங்கள் விசேட பிரதிநிதித்துவ இராசியஉறவைப் பூரணஸ்தானிக உறவாக உயர்த்திக் கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் பரிசு

அன்று சாயங்கரம் வழமைபோல நாலுமணிக்குப் பாடசாலை முடிந்தது. பிள்ளைகள் தத்தம் வீடு திரும்ப, ஒரு வகுப்பறையில் மட்டும் பிள்ளைகளின் மகிழ்ச்சி ஆரவாரம். அறையும் சுகந்த மலர்கள், பசுந் தளிர்களால் சோபித்தது. காரணம், வகுப்பு ஆசிரியை சங். ஐசிந்தா சிஸ்றரின் பிறந்த பெருநாளே. அறையிலே சிறிதுவேளையில் அவர் பிரவேசித்தபோது, பிள்ளைகள் கரகோஷஞ் செய்து, மலர்ச் செண்டளித்து, அவரை வரவேற்றுப் பாமாலை சூட்டினார்கள். தங்கள் மதலை மொழிகளால் அவருக்கு நன்றி பாராட்டினார்கள். சிறுசிறு வெகுமதிகள் வழங்கினார்கள். ஆசிரியையும் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஆசி கூறினார்.

அதன்மேல் நடைபெற்ற உரையாடலிலே பிள்ளைகளில் சிலர் தங்கள் தாய்மாரின் பிறந்த பெருநாள் பற்றியும், அவர்களுக்குத் தாங்கள் கொடுத்த பிறந்த பெருநாள் வெகுமதி பற்றியும் சிஸ்றரிடம் கூறினார். வேறுசிலர் வரப்போகும் தங்கள் தாய்மாரின் பிறந்த பெருநாள் பற்றியும், அவர்களுக்குத் தாங்கள் கொடுக்க விரும்பும் பிறந்த நாள் வெகுமதி பற்றியும் பேசினர்.

அப்பொழுது ஜேம்ஸ் என்ற பாலியன் தனது அன்னையின் பிறந்த பெருநாள் பாஸ்குத் திருநாளன்று வருவதாகச் சிஸ்றரிடம் தெரிவித்து, அன்று என்ன வெகுமதியைத் தனது அன்னைக்குக் கொடுக்கலாமென அவரை வினவினான். இதைக் கேட்டதே பிள்ளைகளில் சிலர் தங்கள் மனம் போன போக்கில் ஒவ்வொன்றை எடுத்துக்கூறினர்.

"ஒரு பெட்டி இனிப்புகள் வாங்கிக் கொடு" என்றான் ஓர் இனிப்புப்பண்டக் கடைக்காரனின் மகன்.

"ஒரு புதிய உடுப்பு வாங்கிக் கொடு" என்றான் ஒரு புடவை வியாபாரியின் மகன்.

"ஒரு கார் வாங்கிக் கொடேன்" என்றான் ஒரு கார் முதலாளியின் மகன்.

"அழகான ஒரு கேக் வாங்கிக் கொடேன்" என்றான் றொட்டி சுடுகிற ஒருவனின் மகன்.

"நல்ல புத்தகங்களாய்ப் பார்த்து நாலைந்து புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தாலென்ன" என்றான் ஒரு புத்தகக் கடைக்காரனின் மகன்.

"தோடம்பழம் இப்போது நல்ல மலிவல்லவா? ஒரு பெட்டி தோடம்பழம் வாங்கிக் கொடுத்தாலென்ன" என்றான் ஒரு தோட்டக்காரனின் மகன்.

ஆனால், ஒரு சிறுவன் மட்டும் எல்லாரிலும் பார்க்க ஒரு நல்ல ஆலோசனை கூறினான். "உன்னுடைய அம்மாவுக்கு எது அதிகம் விருப்பமோ அவ்விடம் அதை நீ ஏன் கேட்டறியப்படாது" என்றான் அவன்.

"அதுதான் சரி" என்றார் சிஸ்றர். ஏனையவர்களும் அது தான் நல்லது என்று ஆமோதித்தார்கள்.

விழா முடிந்தது. பாலியனும் எதையோ சிந்தித்தபடியே தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அப்பொழுது அவன் தாய் இராச் சாப்பாடு தயாரித்துக்கொண்டு சமையல் அறையில் இருந்தாள். ஜேம்ஸ் அங்கு சென்றதுதான் தாமதம் தாயின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "அம்மா, உங்கள் பிறந்தபெருநாள் வருகிறதல்லவா? அன்று நான் உங்களுக்கு என்ன வெகுமதி கொடுத்தால் உங்களுக்கு நல்ல விருப்பமாயிருக்கும்?" என்று செல்லமாய் அவளைக் கேட்டான்.

இதைக் கேட்டதே அவள் திகைப்பூண்டில் மிதித்தவள் போல் சிறிதுவேளை திகைத்து நின்று, பின்னர் அவனைத் தழுவிக்கொண்டு, "மகனே, எனது பிறந்தபெருநாள் இம்முறை பாஸ்குத் திருநாளன்று வருகிறது; அதற்கு இன்னும் எத்தனையோநாள் இருக்கிறது; அது எப்படியென்றாலும் நீ ஒரு நல்ல பிள்ளையாய் நடக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்" என்றாள்.

"இல்லை அம்மா, அன்று நான் தங்களுக்கு ஏதோ ஒரு சந்தோஷம் செய்யவேண்டும்;

— ஞானம் —

என்னுடன் படிக்கும் பிள்ளைகள் சொல்லுகிறார்கள், தங்கள் தாய்மாரின் பிறந்த பெருநாளில் எப்போதும் அவர்களுக்கு ஒருவெகுமதி கொடுப்பதாக."

"நல்லது மகனே, அப்படியானால் எனது விருப்பம் எதுவென்று சொல்லட்டுமா?"

"ஆம், சொல்லுங்கள் அம்மா."

"ஆனால், மகனே! அதை உன்னால் தாமுடியாது."

"அது இன்னதென்று சொல்லுங்கள் அம்மா; என்னால் ஆனமட்டும் முயன்று பார்க்கிறேன்."

"மகனே, உனது அப்பா இருக்கிறாரே; அவர் மனந் திரும்பவேண்டும் என்பது தான் என்னுடைய ஒரேவிருப்பம்."

ஜேம்ஸ் சிறிது வேளை சிந்தித்துவிட்டுத் துள்ளிக்கொண்டெழுந்து, "நல்லது அம்மா, இதை நான் செய்துதருகிறேன்" என்று வாக்களித்தான்.

ஜேம்சின் தந்தை ஒரு கிறிஸ்தவர் அல்ல. அவர் ஒரு உத்தமகணவர். அன்பும், தயையுமுள்ள ஒரு நல்ல தந்தையர். பிரபல வியாபார நிலையம் ஒன்றின் சொந்தக்காரர். அயலகத்தார் அனைவாலும் அதிகம் சங்கிக்கப்படுகிறவர். ஆனால், அவருக்குச் சமயமோ கோவில்குளமோ கிடையாது. அவர் ஒருபோதுமே திருமுழுக்குப் பெறவில்லை. அத்தகைய ஒரு உத்தம கணவரை — ஒரு நல்ல தந்தையை மனந்திருப்ப வேண்டும் என்பதுதான் அவர் மனையாளின் பேராவல்.

இராப்போசனம் முடிந்தது. ஜேம்ஸ் சமையல் அறையில் தன்னுடைய தாய்க்கு உதவி செய்துகொண்டு தனிமையாயிருந்தபோது இதுதான் நல்ல தருணமென்று, அவன் தனக்குப் பிறந்த பெருநாள் வெகுமதியாகத் தரப்போவ தாய்க் கொடுத்த வாக்கைப் பற்றி அவனுடன் பேசத் தொடங்கி,

"ஜேம்ஸ், நீ எனக்கு அந்த வெகுமதியை எப்படித் தரப் போகிறாய் மகனே?"

அவன் சாந்தமாக, "அம்மா, நான் தேவதாயாரிடம் அதைக் கேட்கப்போகிறேன். மாதா எனக்கு அதைத் தருவார். தேவதாயாரிடம் எதைக் கேட்டாலும் அவர் அதை மறுக்கமாட்டாரென்று சிஸ்றர் ஐசிந்தா சொல்லுகிறார்.'

ஜேம்ஸ் மறு நாள் முதல் தினமும் அயலிலுள்ள பங்குக் கோவில் சென்று, அங்குள்ள தேவமாதாவின் திருச்சுரூபத்திற்கு முன்பாக முழந்தாட்படியிட்டு, "தாயே, பிள்ளைகளின் மன்றாட்டை நீர் ஒரு போதும் தட்டமாட்டீராமே; உம்மிடம் எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்ல மாட்டீரென்று சிஸ்றர் சொல்லுகிறார்; என் மன்றாட்டுக்கு மனமிரங்கி என் அப்பாவை மனந்திரும்பச்செய்யும்; ஆனாலும் பாஸ்குத் திருநாளுக்கு முன்" என்று உருக்கமாக மன்றாடுவான். சிலவேளை அழுதும்விடுவான், கனவிலும் நனவிலும் "மாதாவே, அப்பாவை ... ..." என்பதுதான் அவன் மன்றாட்டாயிருந்தது.

அவ்வாறாக ஒன்று, இரண்டு, மூன்று என்று தினங்கள் பல உருண்டோடின. ஒரு நாள் சாயங்காலம் ஐந்துமணி இருக்கும். ஒருவர் காரில் சென்று பங்குக்குரவரின் கதவில் தட்டுகின்றார். அவரும் கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகின்றார். அங்கு நின்ற மனிதர் அவருக்கு மரியாதை செய்துவிட்டு,

"சுவாமி, நான் ஒரு கத்தோலிக்கனாக விரும்புகிறேன்; அதற்கு ஆயத்தஞ்செய்ய எவ்வளவு காலஞ் செல்லும்?"

"நீர் உமது ஞானோபதேசப் பாடங்களைப் படித்து முடிப்பதில்தான் எல்லாம் தங்கியிருக்கிறது."

"வருகிற பாஸ்குத் திருநாளுக்குமுன் நான் திருமுழுக்குப் பெற முடியுமா?"

"ஆம், முடியும்; ஆனால், நீர் ஒழுங்காக வந்து படிக்க வேண்டும்."

"அப்படியானால் நான் ஒவ்வொருநாளும், வேண்டுமானால் ஒருநாளைக்கு இருமுறை தானும் வருகிறேன்; பாஸ்கு ஞாயிறன்று எனது மனைவியின் பிறந்த பெருநாள்; அதற்குமுன் நான் திருமுழுக்குப் பெற்று, அன்று தினம் முதல்நன்மை பெறவேண்டும்; ஆனால், இதைப்பற்றி எவருக்குமே சொல்லவேண்டாமென்று தங்களை வேண்டுகிறேன்."

ஈற்றில் அவர் ஞானோபதேசப் பாடங்களை இரண்டுவாரங்களில் படித்துமுடிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அவரும்

(4-ம்பக்கம் பார்க்கவும்)

## உத்தானம் உறுதிப்படுத்துகிறது

(இ. பேர்னுட்)

கர்த்தரின் உத்தானம்—உண்மைச் சம்பவம்—விசுவாச சத்தியம்—தத்தளிப்பில்லாமல் விசுவசிக்கவேண்டிய சத்தியமும்கூட. ஆம், 'வேதாகமத்தின்படியே மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்தார்' நாம் நாள்தோறும் செபித்து வரும் விசுவாச சத்தியத்தின் ஒருபகுதி.

ஏன் புனித சின்னப்பர்கூட "கிறீஸ்து உயிர்த்தெழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் விசுவாசம் வீண்." ஆம் உண்மையில் திருச்சபையின் அடிப்படை விசுவாச சத்தியம் என்றுகூட இதைக் கூறலாம்.

மனிதர் எனப்பட்டவர்கள் எல்லோரும் மாண்டு மடிகின்றனர். ஆனால் அவர்களால் தமது சுயவலிமைகொண்டு உயிர்பெற்று எழமுடியாது இந்த விஞ்ஞானயுகத்தில் கூட இதை எவரும் சாதிக்கவில்லை. ஆனால் மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையும் ஒருங்கே வாய்ந்த கிறீஸ்துமட்டும் மாணத்தை வென்று உயிர்பெற்றார். தாம் தேவன் என்பதைத் தெட்டத் தெளிவாய் எடுத்துக் காட்டினார்.

அப்போஸ்தலர்களுக்குக்கூட இது பெரிய புதிராய் இருந்தது. இது விடயமாய் அரைகுறை விசுவாசம்கொண்டிருந்தனர். அதனாலேதான் புனித தோமையார் ஏனைய சீடர்கள் ஆண்டவரைக்கண்டோம் என்று கூறியபோது அதை விசுவசிக்கவில்லை. யேசுவை நேரில் கண்டபின்பே விசுவசித்தார். தோமையாருக்கு மட்டுமல்ல ஏனையவர்களுக்கும்தான் இது பெரிய தொல்லை கொடுத்தது.

உயிர்த்தபின் அப்போஸ்தலருக்கும் சீடருக்கும் காணப்பட்டபோது 'சமாதானம் உண்டாவதாக!' 'பயப்படாதீர்கள்' என்றவார்த்தைகளைக் கூறினார். இவற்றிலிருந்து அவர்களும் கிறீஸ்துவின் உத்தானம் பற்றி விசுவாசக்குறைவுடையோராய் விளங்கினர் என்பது தெளிவாகிறது. எனவே விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும் சம்பவமாக உத்தானம் விளங்குகிறது.

இன்னும் நாம் அனைவரும் இறப்போம் என்பதையும் இறந்தபின் நித்தியவாழ்விற்கு ஒருநாளைக்கு உயிர்ப்போம் என்பதையும் கிறீஸ்துவின் உத்தானம் எடுத்துக்காட்டுகிறது. எனவே எம்விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி அரியபல உண்மைகளைப் புகட்டி நிற்கும் யேசுவின் உத்தானத்தைத் தத்தளியாது விசுவசிப்போம். தூர்ந்திருக்கும் எம் விசுவாசத்திற்கு கிறீஸ்துவின் உத்தானத்தின்மூலம் புத்துயிரளிப்போம்.

இற்றைநாளில் எமது விசுவாசம் தளர்ந்து போனதினால் திருமறைத்தாயைக்கூட கைவிட்டுச் சென்றனர் பலர். சொல்லியபடி கல்லறைவிட்டெழுந்தயேசு அன்றொரு நாள் படகு புயலினால் தாக்கப்பட்டபோது அச்சத்தினால் அலறிய அப்போஸ்தலருக்கு அற்ப விசுவாசமுள்ளவர்களே ஏன் பயப்பட்டீர்கள்? என்று அவர்களைக் கடிந்து அச்சத்திலிருந்து அவர்களைக் காத்தார். அதேபோல் இன்றும் கேட்கிறார் ஏன் பயப்படுகிறீர்கள் கர்த்தரின் உத்தான மூலம் விசுவாசம் தழைக்க உத்தான யேசுவை உருக்கமாய் வேண்டுவோம்.

## குஷ்டரோகர்மத்தியில் குருவானவர்

வண. இசையாஸ் பெலம் சுவாமியார் குஷ்டரோகம் கண்டு 1950ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள குஷ்டரோகர்சாலை ஒன்றில் அனுமதிக்கப்பெற்றார். மூன்றுவருடங்களின்பின் அவர் குணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுக்குஷ்டரோகர் குடியேற்றதலத்தினின்றும் விடுதலைசெய்யப்பட்டார். இவர் அங்கிருந்து வெளியேறியபோதிலும் தமது உடன்தொழுநோயாளர் அனுபவித்துவரும் துன்பவேதனைகளையும், அவர்களின் தேவைகளையும் மறவாதவராய் அவர்களுக்கு உதவி செய்வதற்கும், அவர்களின் துன்பப்பீடைகளில் கலந்து கொள்வதற்குமாகத் தாமாகவே அங்குசென்றார். மரணபரியந்தம் இவர் அங்குதானே இருந்துவருவார். இன்று இவர் குஷ்டரோகர்களின் மற்றோர் அப்போஸ்தலராய், மற்றொரு தமியான் சுவாமியாராய் விளங்கித் தமது வீரத்துவதியாகத்தாலே தம்மாலானஉதவியெல்லாம் செய்து அவர்களின் அன்பராய் இருந்துவருகின்றார்.

## ஒற்றுமைக்கு வழி

சென்றவாரம் ஆங்கிலநாட்டு வெஸ்ற்மினிஸ்ரர் அதிமேற்றிராசன துணை ஆயர் பட்லர் அடிகளார் நிகழ்த்திய வானொலிப் பேச்சில் கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமை எத்தன்மையானதாய் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தெளிவுபடுத்தினார். அத்தியாவசியமாக விசுவசிக்கவேண்டிய சத்தியங்களை இருசாராரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே மிகப் பிரதானமானதென்றும், இச்சத்தியங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே ஒப்புக்கொள்ளப் பட்டதாயிருப்பதால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய விசுவாச சத்தியங்கள் மிகச்சிலவே எனவும் அவர் எடுத்துக் காட்டினார்: ஒற்றுமை ஏற்படுங்காலத்தில் இருசாராரும் இப்போது இருக்கும் தத்தம் நிலைமையைப் பொதுச்சபையில் அமுத்திவிட முயலாது, பலவகை மாறுநிலைமைகளையும் ஏற்றுக்கொள்ளமனதைத்தயார் படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஞாயிறு பகலில் பாப்புவின் தரிசனம்

(சாமுவேல் பெனடிக்ற்)

பிரதி ஞாயிறு தினமும் இராயப்பர் சதுக்கம் சனத்திரளால் நிறைந்திருக்கும். ரோமை நகரத்தின் நாலுபக்கங்களிலுமிருந்தும் மக்கள் வந்து சேர்ந்துகொண்டேயிருப்பார்கள். ரோமைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டவர்களும் ஞாயிறுபகலை ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

ஞாயிறு நண்பகலில திருத்தந்தை தமது வாசஸ்தலத்திலிருந்து பக்தர்கட்கு காட்சி தருவார். சிறு சொற்பொழிவு நிகழ்த்துவார். பக்தர்களுடன் சேர்ந்துசெபிப்பார். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றவே இந்தஆரவாரங்கள்.

ஆயின் இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ள இராயப்பர் சதுக்கத்துக்குத்தான் செல்லவேண்டும் என்ற நியதி இல்லை. இராயப்பர்போலயத்துக்குச் செல்லும் வீதிகளிலும் நின்று பாப்புவின் தரிசனத்தைப் பெறலாம். பக்கத்திலுள்ள கட்டிடங்களின் சாளரங்களினூடாகவும் நோக்கலாம். குருக்கள் பயிற்சிப்பள்ளியிலிருந்தும் பார்க்கலாம்.

இராயப்பர் போலயத்துக்குப் பக்கத்தில் வத்திக்கான் மாளிகைக்கட்டிடங்கள் இருக்கின்றன. இக்கட்டிடங்கள் ஒன்றில் மேல்மாடியில் பாப்புதந்தை வசிக்கிறார். இந்த அறையின் சன்னல்கள் சாதாரணமாகத் திறந்துவிடப்படுவதில்லை. முக்கியமான நிகழ்ச்சிகளின்போதுதான் அவை திறக்கப்படும்.

ஞாயிறு பகல் பதினொன்றரைமணி. இராயப்பர் சதுக்கத்தில் சனவெள்ளம் அலை மோதுகிறது. வீதிகளிலும் போக்குவரத்து தடைப்படுமளவுக்கு சனத்திரள். பக்கத்தில் ஏன் தூரத்தில்கூட, உள்ள கட்டிடங்களின் சன்னல்களும் கதவுகளும் திறக்கப்படுகின்றன. அங்கெல்லாம் ஆர்வமிக்க பல தலைகள்தென்படுகின்றன.

பகல் பன்னிரண்டு. திருத்தந்தையின் அறைச்சாளரங்களை வத்திக்கான் அலுவலாளர்கள் திறக்கின்றார்கள். பாப்பரசரின் உத்தியோக முத்திரை பொறித்த வெல்வெட்டுத் துணியொன்றை சாளரத்தின் கீழே தொங்கவிடுகிறார்கள். எல்லோரும் ஆவலாக அந்தச் சாளரத்தையே நோக்குகிறார்கள். ஒலிவாங்கும் கருவியொன்று நிறுவப்படுகிறது. ஓர் அலுவலாளர் அதைப் பரீட்சைபார்க்கும் சப்தம் ஒலிபரப்பிகளில் மட்டுமல்ல வத்திக்கான் வானொலி நிலையத்தை திருப்பிவிட்டிருக்கும் வானொலிப்பெட்டிகளிலும் பக்தர்கள் பலர் கரங்களில் வைத்திருக்கும் டிரான்சிஸ்டர்களிலும் ஒலிக்கிறது. திருத்தந்தையின் தரிசனம் அண்மிவிட்டதென்பதற்கு இது அடையாளம்.

வெண்ணுடை தரித்த மெல்லிய உயர்ந்த உருவமொன்று சன்னலில் தெரிகிறது. அதன் கரங்கள் அகல விரிக்கப்பட்டு அங்குள்ளார் அனைவரையும் அரவணைக்கும் பான்மையில் தெரிகிறது. ஆம் அவர்தான் திருத்தந்தை சின்னப்பர். கிறிஸ்துவின் பிரதிநிதி. திருச்சபையின் தலைவர். ஒரு வெண்கொற்றக் குடை நிழலில் இவ்வுலகாள் வேந்தன், உரோமையின் மேற்றிராணியார். இராயப்பரின் வாரிசு.

மக்கள் வெள்ளத்தில் ஆர்ப்பரிப்பு அலையென எழுகிறது. **இல்பாப்பா** என்ற தூல்களும் **வீவா** என்ற வாழ்த்தொலியும் ஒன்றுடனொன்று மோதுகின்றன. கைலேஞ்சிகள், தொப்பிகள், சிறுகொடிகள் எல்லாவற்றையும் உயர அசைத்து ஆர்ப்பரிக்கின்றனர் மகிழ்ச்சிமிக்க பார்வையாளர்கள். திருத்தந்தையின் வலது கரம் மெல்லென எழுந்து ஒலிவாங்கியை கையால் தொடுகிறது. அச்சிறுசப்தம் மக்களிடையே அமைதியை உண்டாக்குகிறது.

பாப்பரசர் பேசுகிறார். சுருக்கமாக, அவ்வாரத்தின் நிகழ்ச்சிகளை அல்லது அறிவுறுத்தல்களை மையமாகக் கொண்டு அவரது பேச்சு நிகழ்கிறது. பின்னர் திரிகாலச்செபத்தையும் தொடர்ந்து சில செபங்களையும் தொடக்குகிறார். பக்தர்கள் பாப்பரசருடன் சேர்ந்து செபிக்கின்றனர். இறுதியில் அனைவரும் முழந்தாளிட திருத்தந்தை, ஊருக்கும் உலகுக்கும் எனப்படும் விசேட ஆசியை அளிக்கிறார்.

ஆசியைப்பெற்றுக்கொண்டதும் மக்கள்கூட்டம் மீண்டும் ஆர்ப்பரிக்கின்றது. பாப்பரசரும் தமது கரங்களை அசைத்துத்தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபின்னர் மறைந்து போகிறார். சாளரங்கள் சாத்தப்பட மக்கள் வெள்ளமும் இராயப்பர் சதுக்கத்திலுமிருந்து புறப்படுகின்றது.

வாராவாரம் இந்நிகழ்ச்சி தவறாது இடம்பெறுகிறது. பாப்பரசர் தம் கோடைக்கால வாசஸ்தலமான காஸ்தெல் கந்தல்போ மாளிகைக்கு சென்றால் அங்கும் ஞாயிறு தினங்களில் இத்தரிசனையும் செபங்களும் இடம்பெறும்.

இரண்டாவது உலக யுத்த காலத்தில் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் தமது சாளரத்தண்டையில் தோன்றி உலகசமாதானத்துக்காக மக்களுடன் சேர்ந்துசெபிக்கும் வழக்கத்தை ஆரம்பித்தார். இச்செபத்தில் திரிகாலச்செபமும் யுத்தத்தில் மரித்தோருக்கான வேண்டுதலும் இடம் பெற்றது. தினசரி இவ்வழக்கத்தை மேற்கொண்ட பத்திநாதர், யுத்தம் முடிவடைந்ததும் ஞாயிறுதினத்தில் மட்டுமே இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்.

அடுத்த பாப்பரசரான 23-ம் அருளப்பர் இவ்வழக்கத்தை முறையாக மேற்கொண்டதுமன்றி செபங்கட்கு முன்பாக சில நிமிடங்கள் சுருக்க உரை நடாத்துவதையும் சேர்த்துக் கொண்டார். திரிகாலச்செபத்துடன் இவர் [illegible] சானவரின் மந்திரத்தையும் செபித்தார். **எனதன்னை இச்செபத்தை தினசரி செபிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறாள்** என அதுபற்றி அவர் குறிப்பிட்டார்.

தமக்கு முந்திய இருபாப்பரசர்களும் நடாத்திவந்த இந்நிகழ்ச்சியை இன்றைய திருத்தந்தை சின்னப்பரும் மகிழ்ச்சியோடு தொடர்ந்து நடாத்திவருகின்றார். பாப்பரசரைத் தனிமையாகச் சென்று காணும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துவிடாது. எனவே திருத்தந்தையை நேர்முகமாகத் தரிசிக்கவும் அவரது அறிவுரைகளைச் செவிமடுக்கவும் இந்த ஞாயிறு தரிசனத்தை ரோமையின் மக்களும் உலகெங்கும் செல்லும் யாத்திரிகர்களும் ஆவலோடு வாராவாரம் எதிர்நோக்குகின்றார்கள்.

# சமூகத் தொடர்புக் கருவிகள் மூலம் கல்வி பெறுதல்

## உலக மரியாயின் மைந்தர்நாளின்போது வாசிக்கப்பட்டது

இன்று நடப்பனவெல்லாம் பெரியனவாகவே நடாத்தப்படுகின்றன. ஒரு மூலையிலிருந்து நாம் தனிமையான வாழ்வு நடாத்தமுடியாது. ஏனெனில், சினிமாப் படக்காட்சிகளினாலும், சொற்பொழிவுகளினாலும், பாட்டுக்களினாலும் நாம் சூழ்ந்துள்ளோம். நாம் யாராயிருந்தாலும் இவை நம்மைத் தாக்குகின்றன. கிறிஸ்துவ வேதத்தை வாழ்ந்து காட்டும், மரியாயின் மைந்தராகிய நாம், இந்தப் படக்காட்சிகளும், சொற்பொழிவுகளும், பாட்டுக்களும் எங்களுக்கு உதவி செய்யும்படி செய்யவேண்டும். அதுமாத்திரமின்றி, மற்றைய கிறிஸ்தவமக்களும் இந்தப் படக்காட்சிகளையும், சொற்பொழிவுகளையும் பார்த்துக் கேட்டு நல்ல கிறிஸ்தவர்களாய் வாழவும் நாம் உதவி செய்யவேண்டும்.

புத்தகங்களும், வாரஇதழ்களும், படக்காட்சிகளும், வானொலிகளும் இப்போது ஒரு சிறிய குழுவினர்க்கன்று; ஆயிரம்கோடி மக்களுக்குக் காண்பிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, "றீடர்ஸ் டைஜெஸ்ற்" என்ற ஆங்கில மாத இதழ், ஒவ்வொரு மாதமும் 28 கோடி இதழ்களை விற்கின்றது. அதை வாசிப்போர் தொகை இன்னும் அதிகமாகவே இருக்கும். ஒவ்வொருவரும் தாம் ஒவ்வொருநாளும் உணவு சாப்பிடுவதுபோல், ஒவ்வொருநாளும் அவசியம் பத்திரிகைகளை வாசிக்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஆகவே முதலாவதாக மரியாயின் மைந்தராகிய நாம் இத்தத் தொடர்புக்கருவிகள் நம்மை நல்ல கிறீஸ்தவர்களாக ஆக்குவதற்கு எப்படி உதவி செய்யவேண்டுமென்று அறிய வேண்டும். இவை நம்மைமட்டுமன்றி, மற்றைய கிறீஸ்தவர்களையும் பாதிக்காத வண்ணம் கவனமெடுத்துக் கொள்ள வேண்டும்.

இவைகளை நாம் ஆராயும் போது, மூன்று முக்கிய அம்சங்களை மனதிற் கொண்டுவர வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அதாவது நாம்பார்த்து வாசிக்கும் செய்தித் தாள்களிலும், கேட்கும் செய்திகளிலும், பார்த்துமகிழும்சினிமாக்களிலும் **எது நல்லது? எது உண்மையானது?** என்று நாமே தீர்மானிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். புது எண்ணங்களைத் தண்ணீர் குடிப்பதுபோல் மடமடவென்று எடுத்துக்கொள்ளாமல், அவற்றின் நன்மை தீமைகளைக் கவனித்துக்கொள்ள அறியவேண்டும். "சீக்கோ" என்னும் கைக்கடிகாரம் பலவிதங்களிலும் விளம்பரப்படுத்தப் பட்டாலும் அந்த விளம்பரங்கள் அதனைச் சிறந்த கைக்கடிகாரமாக ஆக்கமுடியாது. ஆனால் 'சீக்கோ' கடிகாரத்தின் உரிமையாளர் தனது பெயரை அக்கடிகாரங்களில் பொறிப்பதையிட்டுப் பெருமை கொள்வாரேயானால், அவர் தமது கடிகாரங்கள், தமது பெயருக்கு எவ்வித இழுக்கும் உண்டுபண்ண மாட்டாது எனப் பெரிதும் நம்புபவராக இருத்தல் வேண்டும். அதைப்போலவே, ஓர் அரசியல்வாதி எங்களுக்குப் பலவிதமான உதவிகள் செய்து தருவதாக வாக்களித்தபோதிலும், அவர் எல்லாவற்றையும் செய்துதருவார் என நம்பமுடியாது. கடந்தகாலத்தில் அவர் என்ன காரியங்கள் செய்தாரென்றும், அவரது வாழ்க்கை எப்படிப்பட்டதென்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நான் செல்வந்தனாயிருந்தால் அல்லது ஓர் அழகான மனைவியை அடைந்தவனாயிருந்தால் அல்லது "டாக்றன்" சட்டையை அணியும் ஒரு கணவனை அடைந்தவளாய் இருந்தால்தான் நான் மகிழ்ச்சியாகவாழலாம் என்று ஒரு சினிமாப் படக்கதை கூறுமாயின், நாம் இந்தக் கருத்துக்களைப் பற்றி ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும். காதல் கதைகளிலும், சினிமாக்களிலும் வளமான வாழ்வைப் பற்றிப்பிடித்து அவற்றைப் பின்பற்றி வாழ்ந்து தங்களது வாழ்வையே கெடுத்துக் கொண்ட சிறார்கள் எத்தனை பேர்? **"உண்மையான வாழ்வை"** நாம் சினிமாக்களில் காண்பதில்லை; ஆனால், **"நடவாத கதைகளை"** சினிமாப்படம் எடுத்துக் காட்டுகின்றது என்றும், வாழ்க்கை அப்படிப்பட்டதல்லவென்றும் நாள் சென்றபின் எத்தனையோபேர் அறிகின்றனர். அப்படியாயின் சினிமா கூடாதா? இல்லை ஆனால் எங்களது வாழ்க்கை நோக்கங்களை, ஆக்கும் படங்களை நாம் தெரிந்துகொள்ளப் பழகவேண்டும். கிறீஸ்துநாதருடைய வாழ்க்கைமட்டும் தான் நல்லதெனக் கருதத் தேவையில்லை. ஆனால் உண்மையான அன்பையும், எங்கள் குடும்பத்தின்மேலும், நாட்டின்மேலும், கடவுள்மேலும் உண்மையான அபிமானத்தையும் தாவல்ல படங்களும் நல்லவையே. நல்ல திட்டமான எண்ணங்களையும் மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக வேலை செய்யும் ஆட்களின் எடுத்துக்காட்டுக்களையும், மற்றவர்களுக்காகத் தமது வாழ்வில் துன்பமுறும் ஆட்களையும், ஆனால் தாமே கடைசியில் இதற்காக மகிழ்ச்சியடையும் எடுத்துக்காட்டுக்களையும் காட்டும்படங்களும் நல்லவையே. ஆகவே முதலாவதாக நாம் பார்ப்பவற்றிலும், கேட்பவற்றிலும், படிப்பவற்றிலும் எதுநல்லது எது உண்மையானது என்று தீர்மானித்து அறியவேண்டும். எப்படி நாம் தீர்மானிக்கவேண்டும்? அதுதான் வளர்ந்த கிறீஸ்தவர்கள் எனப்படுதல். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் எங்களது கண்களிலும், காதுகளிலும் நாள்முழுவதும் நல்ல கவர்ச்சிகரமான முறையில் எவ்வளவோ விடயங்கள் திணிக்கப்படுகின்றன. நாம் கண்மூடித்தனமாக இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடும்.

இந்தக் கேள்வியின் மறுபக்கம் படக்காட்சிகள், சொற்பொழிவுகள், பாட்டுக்கள் இவற்றின் மூலமாக எப்படி மக்கள் நல்ல கிறீஸ்தவர்களாக வாழ நாம் உதவி செய்யலாம் என்பதேயாகும். நாம் என்பதனால் இன்று, இங்கேயிருப்பவர்களையே குறிப்பிடுகிறேன். நாம் என்னசெய்ய முடியும் என்பதை ஆராயவேண்டும். இந்தப் படக்காட்சிகள், பாட்டுக்கள், சொற்பொழிவுகள் முதலியன நல்லமுறையிலும், பிரயோசனமான விதத்திலும் இங்கிருக்கும் மரியாயின் மைந்தரின் கூட்டத்திற்கும், மற்றக்குழுக்களுக்கும் மட்டுமல்ல, ஆனால் எமதுகருத்துக்களைப் பிறரிடத்தும் பதியச்செய்ய முடியும் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இன்று இந்தநல்லெண்ணங்களைப் பதியச்செய்யப் பலசாதனங்கள் உண்டு. உதாரணமாக மரியாயின் மைந்தர் அங்குமிங்கும் கூடுவதைவிட, முன்பு இலங்கையிலிருந்தது போல, ஓர் அச்சடித்த செய்தியை வெளியிடுவது எவ்வளவோ நன்மைபயக்கும். ஆனால் நாம் அதைச் சரியாக உணரவில்லை. ஆகவே அட்டபடிப்பட்ட ஒரு செய்தித்தாளுக்குப் பணஉதவி புரியவில்லை; அன்றியும் நல்ல எண்ணங்களைப் பத்திரிகையில் பிரசுரிக்கவில்லை. மரியாயின் மைந்தராகிய நாம் என்னசெயலாற்றுகின்றோம் என்று பத்திரிகைகளுக்கு எழுதவில்லை. எடுத்துக்காட்டாக எத்தனைபேர் தாம் சிரமதானத்தைப் பற்றி வாசித்ததினால் தாங்களும்சேர்ந்து தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவிசெய்துள்ளனர்? ஒருவருமில்லை. பாடசாலையில் நாம் மட்டும் கூடுவதைவிட்டு, படங்களும், சுவரொட்டிகளும் ஒருபெரிய விளம்பரப் பலகையில் போட்டால் முழுப்பாடசாலையே எங்களது எண்ணங்களில் தாக்கப்படும்— இப்படியான வேலைகளில் நாம் கடுமையாக உழைத்தால், அதில் அக்கறை காட்டினால் விரைவில் வானொலி சினிமா எழுத்து முதலிய கலைக

[மறுபக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவே எம்மில்நீர் வாழவேண்டும் உமது வாழ்வு எம்மில் வளரவேண்டும்

(செல்வி ஜசிந்தா எட்வேட்)

சத்தியத்திற்கும் சாட்சி பகரவந்த நித்திய ஒளியாம் கிறீஸ்து எம்மில் வாழவேண்டுமாயின் அவருடைய ஒளி எம்மில் பிரகாசிக்க வேண்டும். அவருடைய தெய்வீக அன்பு எம்மில் பரிணமிக்கவேண்டும். தாழ்ச்சிமிக்க தச்சன் மகனுகத் தவழ்ந்த தயாபரகருணை உள்ளங்கொண்ட கர்த்தர் இக்காசினியில் கன்மம் போக்கித் தம்மைத்தாமே அன்பின் சின்னமாக அர்ப்பணித்தார் என்பது அவனிமக்கள் அனைவரும் அறிந்த உண்மையே.

அன்பே வடிவாய் அவதரித்த அமலன் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்; கேட்கின்றார். ஆம் இன்றும் கேட்கின்றார். தம் அன்பையே அவர் எமக்குத் தந்து அன்பின்மூலம் எம்மில் வாழ்கின்றார்.

## எப்படி வாழ்கின்றார்

பூர்வீகத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்றவேலர் வாக்குத்தத்தபூமிக்குச்செல்லுகையில் இரவில் அக்கினித் தூணுகத் தோன்றிய ஒளி, மோயீசனுக்கு எரியும் முட்புதராக முன்னின்ற ஒளி இப்போ எமது ஆன்மா பாவவிருள்மூடிவிடாதபடி பாதுகாத்து அந்த ஆன்மாவைத் தமது இருப்பிடமாக்கிக் கொள்கின்றது. அது மட்டுமோ? இன்னும் கேளுங்கள் எப்படித் தேனேடு பால் பொழிந்த கானானுக்கு யாத்திரை செய்த கடவுளின் மக்களாம் இஸ்ருயேலரை மன்னு என்னும் அரியபோசனம் இரட்சித்ததோ அஃதேபோல் நாமும் எமது பரலோக யாத்திரையில் அலைக்கழிக்கப்படாது இரட்சிக்கப்படுவதற்குச் சீவிய அப்பமென்னும் அரிய விருந்தைத் தமது அன்பின் தேவதிரவிய அனுமானமாக்கித்தந்து அதைப் புசிக்கிறவன் என்னில் நிலைத்திருப்பான் அவனுக்கு நித்திய சீவிடம் உண்டு என்று திருவுளம்பற்றியதுடன் போதாது தினமும் திருப்பலிமூலம் எமது உள்ளமென்னும் ஆலயத்தில் உயிருடன் வாழ்கின்றார். ஆம்! அந்த அன்பின் இறைவன் அடியாரில் அனுதினமும் வாழ்ந்து கொண்டே வருகின்றார் என்பதற்கு ஐயமேயில்லை. எப்பொழுதும் எம்முடன் வாழ்கின்றார் யேசு. ஆம் நாம் சாவான பாவமில்லாது அருளுயிருடன் இருக்கும் தோறும் எம்முளக் கோயிலில் குடியிருப்பவர் அவரே.

யேசுவே! தெய்வீக அன்பரே! தேவரீர் என்னுள்ளத்தில் எழுந்தருள அடியான் பேறுபெற்றவனில்லை. ஆயினும் ஒருவார்த்தைமட்டு சொல்லும் ஆண்டவரே! அப்போ என் உள்ளம் குணமாகிவிடும். எனும் தாழ்மை நிரம்பிய செபம் அவருடைய வருகையை எதிர்நோக்கச் செய்யும். அப்போ எம் தெய்வீக அன்பர் அடியாரிடம் வாழத் தொடங்குவார். என்றென்றும் அவர் எம்மிடத்தில் வாழ்வதே ஒருதனிபண்பு. அன்பே தெய்வம்.

அவர் வாழ்வு எம்மில் வளர்வதற்கு நாம் தினமும் திவ்விய விருந்தருந்துவோமாக. அப்போ நாம் கிறீஸ்தவுடன் சங்கமமாவோம். அச்சங்கமத்தினால் நாமும் மறுகிறீஸ்துகளாகப் பரிணமிக்கின்றோம். இந்த ஒன்றிப்பை நமது அன்றாட வாழ்விலும் நிலைநாட்டவேண்டும். நமது சொல்லிலும், செயலிலும், நினைவிலும், கடமையிலும் பிரதிபலிக்கச் செய்வோமாக. அப்போ அவர் வாழ்வு நம்மில் வளர்ந்து கொண்டு போகும். அந்தத் தெய்வீக அன்பர் ஆசிக்கும் வண்ணம் நடந்து கொள்பவரை அவர் ஆட்கொண்டுவிடுவார். அவர் வெறுப்பவற்றை நாம் தவிர்க்கவேண்டும். எப்படி? அர்ச். ஸ்நாபக அருளப்பர் சொன்னதுபோல பள்ளத்தாக்கெல்லாம் தூர்க்கப்படவேண்டும். அதாவது பள்ளத்தாக்கென எண்ணப்படும் தூர்ச்சிந்தனை நினைவுகளாம் சக்தி நிறைந்த உளங்கள் செபதபமாம், நற்கிரியைகளினால் நிரப்பப்படவேண்டும். மலைகுன்றெல்லாம் தாழ்த்தப்படவேண்டும். அதாவது அகங்காரம், பெருமை, கர்வம் எனும் மலைகுன்றுகள் தாழ்மை எனும் வேலினால் தகர்த்தெறியப்படவேண்டும். காடுமுரடானவை சமனாக்கப்படவேண்டும். அதாவது காடுமுரடான ஒழுக்கமற்றோர் சாந்தமும் நீதிநெறிதவறாமலும் ஒழுகவேண்டும். இவற்றை அனுசரித்து வருவோமேயாகில் ஆன்மஞானம் உண்டாகும். ஆண்டவன் அருள்வாழ்வுவளரும். நாமும் உலகிற்குச் செத்தவர்களாக வாழ்ந்தால் ஆண்டவன் அருள்வாழ்வைக்கண்டடைவோம். நாமும் வாழ்ந்து மற்ற சகோதரரையும் வாழவைப்போம். இந்த ரீதியில் ஒழுகிவருபவர் தம் உளக்கோவிலில் அன்பராம் அமலன் தம் வாழ்வை பிரதிபலிக்கச் செய்வாரன்றோ!

இன்னும் ஒளி ஒளியைக் கொடுக்கும். நீரூற்று நீரைக் கொடுக்கும். அன்பு அன்பைச் சுரக்கும். அஃதேபோல தெய்வீக அன்பரை எமுளத்தில் வாழ வைத்தோமேயானால் அவரது வாழ்வின்மூலம் அவர் அளித்த அன்பை நாமும் மற்றவர்க்கு அளித்து அன்பு வாழ்வில் வளர்ந்துவர ஆசிப்போமாக.

“அறத்திற்கே அன்பு சார்பென அறியார்
மறத்திற்கும் அஃதே துணை”

வானின் அமுதெனப்பொழிந்த மன்னவே! உம் அன்பின் மழையை அடியார்க்கிறைத்து, எம் ஆன்மவாழ்வுக் கருணை அளித்து, அழியா வான்வாழ்வை அடையச் செய்வீரே.

---

✠

**திரு. சவரிமுத்து டொமிங்குப்பிள்ளை**

அவர்களின்

**1-ம் ஆண்டு மரணஞாபகம்**

தோற்றம்: 23-8-1896. மறைவு: 11-4-1969.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழும் சித்திரை 11-ம் திகதி சனிக்கிழமை காலை 6-15 க்கு யாழ்ப்பாண ஆசனக் கோவிலில் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் படுமென்பதை உறவினர் சிநேகிதருக்குத் தயவாக அறிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

---

**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

இரண்டு வருஷகாலமாக பாரிசநோயால் பீடிக்கப்பட்டு வயித்தியராலும் கைவிடப்பட்டு துன்பப்படுடுவேளையில் அர்ச். சதா சகாயமாதாவுக்கும், அர்ச். யூதா ததேயு அப்போஸ்தருக்கும் விண்ணப்பம் செய்தேன் அவர்களின் வேண்டுதலின்பேரால் என்வியாதியில் நின்று குணமாகினேன். பூரணகுணமடைவதற்கு வேண்டிகொள்வோமாக.

அடியான்.

---

# பிறந்தநாள் பரிசு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்காகச் சென்று மிகுந்த ஆர்வத்துடன் படித்து முடித்துப் பாஸ்குத் திருநாளுக்கு முதனாள் இரகசியமாகத் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டார். அவர் குடும்பத்தினருக்கோ இஃதொன்றும் தெரியாது.

கடைசியாக அந்தப் பெரிய பாஸ்குத் திருநாளும், அவர் மனைவியின் பிறந்தபெருநாளும் ஒருங்கே வந்தன. இந்த இரு சுபதினங்களையிட்டு அன்று காலை அவர்மனையில் பெரிய ஆரவாரம். எல்லோரும் திருநாட் பூசைக்குச் செல்ல ஆயத்தம. அப்பொழுது அவர், “நானும் உங்களோடு கோவிலுக்குவரப்போகிறேன்” என்றார். இதைக் கேட்டதே எல்லோரும்பிரமித்தவர்களாய் அவர் முகத்தை ஆச்சரியத்துடன் கூர்ந்துநோக்கினர். அப்பொழுது ஜேம்சின் முகத்திலே அமைதி நிலவியது.

எல்லோரும் கோவில் சென்று ஆசனங்களில் அமர்ந்தனர். பூசைப்பலி ஆரம்பமானது. எழுந்தேற்றம் முடிந்து தேவநற்கருணை பெறும் நேரம்வந்தது. மனைவி, பிள்ளைகளுடன் அவரும் எழுந்துநின்றார். அப்போது மனைவி அவரைப் பார்த்து, “நாங்கள் திவ்விய நன்மை வாங்கப் போகிறோம்; நாங்கள் வருமட்டும் தயவுசெய்து நீங்கள் இங்குதானே இருந்துகொள்ளுங்கள்” என்று மெதுவாக அவரிடம் கூறினள்.

அவர்கள் ஆசனங்களை விட்டுச் செல்லும்வரை அவ்வாறே அவர் இருந்துவிட்டுப் பின்னர் எழுந்து அவர்களைப் பின்தொடர்ந்துசென்று அவர்கள்பக்கமாகக் கிறுதியண்டை முழந்தாட்படியிட்டார், பின்பு சுவாமியார் திவ்விய நன்மை கொடுக்க அவர்முன்பாக வந்தபோது புதிதாக மனந்திரும்பிய அவர் நன்மை வாங்குமாறு தனது நாவை நீட்ட மறந்துபோனர். சுவாமியார் மெதுவாகக் கீழே குனிந்து, “உமது வாயைத் திறந்து நாவை நீட்டும்” என்று இரகசியமாகக் கூறினர். தனது கணவர் முதல்நன்மை பெறுவதைக் கவனித்தபோது மனைவிக்குப் பெரும் புதிராய், ஒரு பெரும் புதுமையாயிருந்தது.

பூசை முடிந்து தந்தை, தாய், பிள்ளைகள் யாவரும் குடும்பமாய், இல்லை, அமைதியான ஒரு குடும்ப ஊர்வலம் போல் வீடுபோய்ச் சேர்ந்ததும் பிறந்தபெருநாள் பரிசாக அவர் தனது அன்புமனைவிக்கு ஆனந்தக்கண்ணீர்பெருக ஆயிரம் பொன்னிலும் கூடியதான ஓர் ஆசை முத்தம் கொடுத்தார் அவர் மனைவியோ புன்முறுவல்பூத்தவண்ணம் தனது கணவரின் அற்புத மனந்திரும்புதலையிட்டுக் கைகூப்பிக் கடவுளுக்கு நன்றித்துதி கூறினள். அதன்மேல் அவரின் கரங்களைப் பற்றிப் பிடித்துத் தலைகுனிந்து ஒரு முத்தம் கொடுத்துத் தனது கண்ணீரால் குளிப்பாட்டிநின்றுள்.

அப்பொழுது ஜேம்ஸ் அவள் முன் சென்று, உளத்திலே மகிழ்ச்சிவெள்ளம் கரைபுரண்டோட, ‘அம்மா, நீங்கள் விரும்பியதைதான் உங்களுக்கு வாங்கித் தந்துவிட்டேன்; இதுதான் நான் உங்களுக்குக் கொடுக்கும் பிறந்தநாள் பரிசு” என்று கூறியபோது, அவள் தன் செல்லமகனை இரு காங்களாலும் வாரியணைத்துக் கண்ணீராறு பெருக அவனுக்கு ஓர் அன்பு முத்தம் கொடுத்து நன்றிகூறினள்.

---

# பல தேசங்களில்

● 1972ஆம் ஆண்டின் ஒலிம்பிக்விளையாட்டுகள் ஜேர்மனி தேச மூனிக் நகரிலுள்ள ஒபர்விசென் செங்பெல்ட் எனுமிடத்தில் நடைபெறவிருக்கின்றது. அதற்கென ஒரே கூரையின்கீழ் கத்தோலிக்க, புறேட்டஸ்தாந்த கோவில்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றிலே முந்தியது 600 பேரையும், பிந்தியது 200 பேரையும் அடக்கக்கூடியன.

● 1968 ஆண்டுடன் முடிவான மூன்று வருடங்களிலும் உலகின் கத்தோலிக்க சனத்தொகை 1 கோடியே 38 லட்சம் பேரால் அதிகரித்திருக்க, குருமார் தொகை 639 பேரால்மட்டும் அதிகரித்திருப்பதாக வத்திக்கான் புள்ளிவிபரவெளியீடு தெரிவிக்கிறது. அதாவது ஒவ்வொரு 2,138 கத்தோலிக்கருக்கும் ஒரு குருவானவர்வீதம் இருந்துவருகின்றனர்.

● தென்னமெரிக்காவைச் சேர்ந்த பிறேசில் நாட்டின் தலைப்பட்டணமாகிய பிறுசிலியா நகரிலே அடுத்த வைகாசி மாதம் நடைபெறவிருக்கின்ற திவ்விய சற்பிரசாத மகாநாட்டை முன்னிட்டு அந்நாட்டுக்கு விஜயஞ் செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குப் பாப்பரசர் உடன்படவில்லையென்று பிறேசில்நாட்டு மேற்றிராணிமாரின் தேசியசங்கம் தெரிவித்திருக்கின்றது.

● லிவர்ப்பூல் மேற்றிராசனத்தில் தொண்டாற்றிவரும் இரட்டைப்பிள்ளைகளான வண. ஜேம்ஸ் பெயிர்னி, ஜோசன் பெயிர்னி [illegible] [illegible] தங்கள் குருத்துவ வெள்ளிவிழாவை அன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடியபோது அந்நகரமக்கள் பெருந்திரளாகச்சமூகமளித்து அதில்கலந்துகொள்வார்கள்.

● ஜப்பானியதேச ஒசாக்கா நகரில் நடந்தேறும் உலக பொருட்காட்சியில்தான் கலந்துகொண்டதன் ஞாபகார்த்தமாக வத்திக்கான் ஐந்து இனமான தபால்முத்திரைகளை வெளியிட்டிருக்கின்றது. இந்த முத்திரைகளிலே ஜப்பானிய பிரபலஓவியரான ரிசூறியோ ஒகாற்ரு என்பவர் தீட்டியபல வர்ணச் சித்திரங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

● தென்னிந்தியாவிலுள்ள கோள இராட்சியத்திலே திருச்சபைக்குச் சொந்தமான காணிகளில் வாடகைக்கு வசித்திருந்த மக்களுக்கெல்லாம் அந்தக்காணிகள் சொந்தமாக்கப்படவிருக்கின்றன. கோள இராச்சிய முழுவதிலுமுள்ள திருச்சபை அதிகாரிகள் அவர்களுக்கு அந்தக்காணிகளை உரிமையாக்குவதற்கான அலுவல்களில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

● சின்னஞ்சிறு போளை அளவு பரிமாணமுள்ள “சந்திரனின் கற்பார்” துண்டு ஒன்றை அன்று இத்தாலிய அரசாங்கத்தினிடமாய் இருந்துவருகின்ற அமெரிக்க ஸ்தானிகரான திரு. கிறகம் மாட்டின் அவர்கள் வத்திக்கான்கொண்டு சென்று பாப்பரசருக்குக் காண்பித்தார். அப்பொழுது வத்திக்கான் வானசாஸ்திர அவதான நிலையத்தைச் [illegible]க்க குருமாரையும் பாப்பரசர் அழைத்து அவர்களுக்கும் அதைக்காண்பித்தார்.

---

# சமூகத் தொடர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் தலைசிறந்த நிபுணர் பலரைப் பெற்றுக்கொள்ளலாம்.

பின்பு எனது இலங்கையில் நல்லெண்ணங்களை இந்தக்காரியங்களில் புகுத்தி, புனித சின்னப்பரைப்போல் ஒவ்வொரு நாளும் நாம் சந்திப்பவரை அல்ல, ஆனல் அதைவிட எவ்வளவோ அதிகமானோரை நல்வழிப்படுத்தலாம். நமது கிறீஸ்துவவாழ்வை நன்குவாழ உதவுவதற்கும் மற்றவர்களும் தங்களது வாழ்வில் கிறீஸ்துவை அறிய உதவிசெய்வதற்கும் இந்தப் பலமுடையசாதனங்களாம் சமூகத்தொடர்புக் கருவிகள் பற்றி எம்மால் இயன்றவற்றை இப்பொழுதே நாம் சிந்திப்போமாக! இப்பொழுதே நாம் முயற்சிப்போம்!! இப்பொழுதே நாம் தொடங்குவோம்!!!

சுவாமி டெள் மார்மல், யே. ச.
தமிழில் தருபவர்: பாக்கியம்.

---

யாரை ஆள்கிறோமோ அவர்களிடம் தான் பெருந்தன்மையும், அக்கறையும் காண்பிக்க வேண்டுமென்பது இந்த நூற்றாண்டின் இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வச் செயல்

( டீ. ஜோசெவ் — பூந்தமல்லி)

பள்ளிசென்றிருந்த சேகர் வீட்டைநோக்கிவந்துகொண்டிருந்தான். தூரத்தில்வரும் போதே வீட்டின் முற்றத்தில் கும்பல் ஒன்று நிற்க, அழுகைக்குரல். ஆவேசம்கொண்டவனாய் வீட்டை நெருங்குகிறான். பள்ளிசென்ற மகனைக்கூடக் காணமுடியாதவராய் அவன் தந்தை இவ்வுலக வாழ்வை முடித்துவிட்டார். வயதுவராதவனாயிருந்தாலும் தந்தையின் பாசத்திலே வளர்ந்தவன் என்ன செய்வான் பாவம். அடியற்ற மரம்போல் நிற்க, கண்ணீர் கரைபுரண்டோடியது.

ஆனால்... அவன் மனதில் கடந்தகால நினைவுகள் திரைப்படம் ஓடுவதுபோல் அலை அலையாகச் சென்றுகொண்டிருந்தது. அவ்வேளை வீட்டினுள்ளிருந்து வந்த சோகப் புலம்பல் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற்போலிருக்க மயக்கமடைந்து சாய்கிறான். அருகிலிருந்தவர்கள் தாங்கிக்கொள்ளுகின்றனர்.

மறுநாள் அடக்கச்சடங்குகள் நடந்துகொண்டிருந்தது. "என் கையால் தந்தைக்கு மண்கொடுத்தேன்" என்று எண்ணியவன் வீடு வந்தடைகிறான். வேலை செய்யவோ இயலவில்லை. படிப்பதோ வேப்பங்காய் போலிருந்தது. ஊண், உறக்கத்தின் மேல் வெறுப்புத் தட்டியது. எந்நேரமும் தந்தையின் நினைவே அலைமோதிக்கொண்டிருந்தது.

தாயின் அரவணைப்பில்நாட்கள் பல உருண்டோடின. தாயோ அவனைக் கொடூரமாக நடத்துகின்றாள். இருதலைக் கொள்ளி எறும்பு போலானான். ஆனால் தாயும் அவனை விட்டுப்பிரிந்து விடுகிறாள். 'நடுத்தெருவு நாராயணா' என்று நிற்க — யார் அவனுக்கு ஆதரவு தருவார்கள்? 'திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை' என்று எண்ணியவனுக்குச்சிற்றன்னையின்ஞாபகம் வருகிறது. சிற்றன்னையின் வீட்டை நோக்கி விரைகிறான். அங்கே நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தான்.

நாட்கள் நகர, நகரச் சிற்றன்னையின் அட்டூழியம் வலுத்துக்கொண்டே சென்றது. காலை எழுந்தது முதல் இரவு படுக்கும்வரை ஓயாத வேலை. ஐயோ! படிக்கும் பையனாயிற்றே — அவன்மேல் இரக்கம்காட்ட யார் இருக்கிறார்கள்? காலை படுக்கை சுருட்டுவது முதல் இரவு படுக்கை விரிப்பதுவரை எல்லாம் இவன்தான் செய்ய வேண்டும். இந்நிலையில் படிக்க நேரமேது? ஏதோ பள்ளியில் எஞ்சிய நேரத்தில் தனது பாடங்களைப் படித்துக்கொண்டான். ஆரம்பப் பள்ளியாயிருந்தாலாவது மதிய உணவு கிடைக்கும். உயர்நிலைப் பள்ளியாயிற்றே! மதியஉணவை அவன் வயிறு கண்டு மாதங்கள்பல ஆகிவிட்டது. உடையோ கிழிந்தவைகள், தலையோ எண்ணெய்க்காக ஏங்கிக் கொண்டிருந்தது. பள்ளியிலோ பாடம் செய்யாமல் தண்டனையும் அனுபவித்தான். வீட்டில் படிக்க விளக்கேது? அல்லது நேரம்தான் ஏது? சிற்றன்னைக்கும், அவள் பிள்ளைகளுக்கும் வேலை செய்யவே சரியாயிருக்கும். இதெல்லாம் குடிவெறி கொண்ட சிற்றப்பாவுக்குத் தெரிந்தால்தானே!

பள்ளிமுடிந்து வீடு திரும்பும்போது அவனின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கும். ஏதோ வயதுசென்றவனைப்போலக் காட்சி அளித்தாலும் எவரின் உதவியையும் நாடினவனல்ல. படிப்பு ஒன்று இருப்பதால்தான் இங்கு இவ்வளவு கொடூரத்திலும் இருக்கிறான்; இல்லையெனில் அவன் போக்கு வேறுதிசையில் சென்றிருக்கும்.

கையில் காலணா இல்லை, என்னசெய்வான்? மாலை வேளை, மதியம் உண்ணாத களைப்பு. கண்கள் சொருக, கால்கள் நடக்க மறுத்தன. ஒரு டீ இருந்தால் எப்படியும் சமாளித்து வீடு போய்ச் சேர்ந்துவிடுவேன் என்ற நம்பிக்கை உள்ளத்தில் எழுகிறது. பக்கத்திலிருந்த மாணவர் விடுதிக்குச்செல்லுகிறான். சமயலறையை நோக்கி நடக்கிறான். முன்பின் தெரியாத இவனை யார் கவனிப்பார்கள்? தலைசுற்ற அப்படியே அமருகிறான். அவ்வேளை அங்கு வந்த இருதயம் முகத்தில் தண்ணீர் தெளிக்க உணர்வு பெறுகிறான். அனாதை என்றறிந்த இருதயம் காப்பி கொடுக்கிறார். 'செய்யாமல் செய்த உதவிக்கு...' என்றபடி நன்றிகூறிவிட்டு — புதுத் தெம்பு பெற்றவனாய் வீடு வந்து கொண்டிருந்தான்.

குறித்த நேரம் கடந்தும் சேகர் வீடுவராததால் சிற்றன்னை சீற்றம் பொங்க, "வரட்டும் அவன்" என்றிருக்குங்கால் சேகர் தள்ளாடியவனாய் வீடு வந்தடைகின்றான். "நீ படித்தது போதும்" என்று அன்றே அவனது படிப்புக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறாள் சிற்றன்னை. ஆனால் சேகர் சோற்றை மட்டும் நம்பியவனாயிருந்திருந்தால் அங்கேயே இருந்திருப்பான். ஆனால் கல்வியைக் கண்ணாகக் கொண்டிருந்தான்.

எஞ்சிய சில துணிகளை எடுத்துக்கொண்டு கிளம்பினான். அன்று அவனை ஆதரிக்காத எவர் இன்று அவனை ஆதரிப்பார்கள்? சிந்தித்துக் கொண்டே தெருவில் செல்லுகிறான். ஒரு கண்ணற்ற கபோதி, "ஐயா! பிச்சை யிடுங்கோ என்று தொண்டை வறளக் கத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிறான். இரக்கம் எழுகிறது. ஆனால்... கொடுக்க அவனிடம் என்னஇருக்கிறது? ஏதோ காசு வைத்திருப்பவனைப்போல் கோப்பைத் தடவினான், கையை மேலே எடுத்தான். அவன் கையில் முகவரி ஒன்று அகப்பட்டது, ஆனால் அது அவனுடைய பழையா வீட்டு முகவரியாய்ப் போய்விடுகிறது. இந்நிலையில் என்ன செய்வான்.

குருடனின் ஆதரவை அடைந்தால் என்ன! என்று ஏதோ ஒரு நினைவு அவனுக்கு எழுகிறது. குருடனிடம் சென்று தன்னையே எடுத்துச் சொல்லுகிறான். மண் குதிரையைநம்பி ஆற்றில் இறங்குவதுபோல் தோன்றியது அவனுக்கு. குருடனும் உடலில் தான் குருடனே தவிர உள்ளத்தில் ஒளி பெற்றிருந்தான். சேகரை ஏற்றுக் கொண்டான். மறுநாளே சேகர் பள்ளிசெல்ல ஆரம்பித்தான்.

வருடங்கள் பல உருண்டோடுகின்றன. "பள்ளி சென்றதுபோதும்" என்று சிற்றன்னையால் நிறுத்தப்பட்டவன் இன்று ஆரம்பப்பள்ளியின் தலைமை ஆசிரியாகக் காட்சி அளிக்கிறார். குருடன் கையேந்தி வாங்கிக் கற்க வைத்தான். இன்று கையேந்துபவர்களுக்குக் கொடுக்கும் அளவிற்குச் சேகர் அவனை உயர்த்திவிட்டான். "நன்றி மறப்பது நன்றன்று..." என்பதற்கொப்பச் சேகரும் குருடனும் ஒற்றுமையாக இருப்பதைக் காணும்போது யார்தான் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியும்?

## குருத்துவ யூபிலி விழாக் குருப்பட்டம்

பரிசுத்ததந்தை ஆருவது சின்னப்பபாப்பரசரின் குருத்துவ யூபிலிவிழா அடுத்த வைாசிமாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை வருகின்றது. அதனை ஞாபகப்படுத்துமுகமாக அன்று தினம் அவர் மூவருக்குத் தமது கரங்களால் குருத்துவாபிஷேகம் செய்யவிருக்கின்றார். இவர்களில் ஒருவர் முன்னாள் அங்கிளிக்கன்சபையினரும், ஓர் ஆசிரியருமான 29 வயதுடைய வண. டேவிட் வால்ற்றர்அவர்கள். மற்றொருவர் ஒக்ஸ்போட் சர்வகலாசாலைப் பட்டதாரியான வண. ஆர்தர் அமிஅவர்கள். இன்னொருவர் ஓர்அமெரிக்கரான வண. எட்வாட் ரூல்வ்அவர்கள். இவர்கள் மூவரும் பீடா குருமடத்து மாணவர்கள்.

* * *

## பின்னிட்டவயதில் குருபட்டம்

தங்கள் பின்னிட்டவயதில் தேவ அழைத்தலை மேற்கொண்ட ரூமைநகரில் அவர்களுக்கென இருந்துவரும் பீடாகுருமடத்தில் வேதசாஸ்திரம் படித்து முடித்த 26பேர் இந்நாட்களிலே ஆங்காங்கு குருப்பட்டம்பெற்று வருகின்றனர். இவர்களில் முன்னாள் ஆசிரியர்கள், சர்வகலாசாலைவிரிவுரையாளர்கள், பரிஸ்றர்கள், எஞ்ஜினியர்கள், நடன ஆசிரியர் என்பவர்களாய்ப் பலரும் அடங்குவர். இவர்களிலே வயதில் முதிர்ந்தவர் 69வயதுடையவரான வண. ஜோன் செவெல். இவர் முன்பு ஒரு பாடகராய்ப் பெயர்பெற்றிருந்தவர், தாரமிழந்தவர். அடுத்தபடியாக வயதில் கூடியவர் 66 வயதுடைய வண. வால்ற்றர் மாட்டீன். இவர் முன்னாள் எஞ்ஜினியர். இவருடைய புதல்விகளில் இருவர் கன்னியாஸ்திரிகளாய் இருக்கின்றனர். குருப்பட்டம் பெறுகின்ற ஏனையவர்களின், வயது 30 முதல் 60 வரையிலாகும்.

## வறுமையை அகற்ற மக்கள் துடித்துக்கொண்டிருக்க வேண்டும்

1970ஆம் ஆண்டு தொடங்கி இருமாதங்களுக்கு முன் அவுஸ்திரேலிய மேற்றிராணிமார் சபையினர் இருமுறை ஒன்று கூடி விசேஷமாகத் தமது நாட்டிலும், பின்தங்கிய உலக நாடுகளிலும் தாண்டவமாடும் வறுமையை அகற்ற வழி வகைகளை ஆராய்ந்தனர். அவுஸ்திரேலிய நாட்டிலே, சமய அரசியல் கட்சி பேதங்களைக் கவனியாது இந்நாட்டிலுள்ள வறுமையை அகற்ற யாவரும் முன்வர வேண்டுமென்றும், தமது நாட்டில் வறுமையை அகற்றக் கடமைப்பட்டிருப்பதுபோல உலகின் பின்தங்கிய நாடுகளின் வறுமையை அகற்றவும் அவுஸ்திரேலிய மக்கள் துடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் தூண்டியிருக்கின்றார்கள். இந்த வருடத்தவக்கால முயற்சியாக இந்நோக்கத்துடன் ஒவ்வொரு கத்தோலிக்க பிரசையும் தமது வருவாயில் ஒருசத வீதம் ஒதுக்கிக் கொடுக்குமாறும் கேட்டிருக்கிறார்கள்.

* * *

## வலதுகுன்றிய பாலிய யாத்திரிகர்கள்

வலதுகுன்றிய 456யாத்திரிகர்கள் இந்தவாரம் இங்கிலாந்து தேசத்திலிருந்து எட்டு ஜெட்விமானங்களில் லூர்து திருப்பதிக்கு யாத்திரைசெய்ய இருக்கின்றனர்; இவர்களுக்கு உதவியாக வைத்தியர், தாதிமார், உதவியாளர், ஆன்மகுருக்கள் முதலியோர் சுமார் 500பேர்செல்கின்றனர். உதவியாளர் யாவரும் தத்தம் செலவிலேயே இத்தயாத்திரையைச்செய்ய முன்வந்திருக்கின்றனர். வியாதிஸ்தருட் பெரும்பாலானோர் அந்நாட்டு தர்மவான்களின் கொடைகளினாலும், சமூகஸ்தாபன தர்ம முயற்சிகளினாலும் இந்த யாத்திரையைச் செய்ய வசதிகள் ஏற்படுத்தப் பட்டன.

* * *

## ஆங்கிலேய வேதசாட்சிகள்

ரூமைநகரில் சமீபத்திலே நடந்தேறவிருக்கும் திருச்சடங்காசார திருச்சங்கத்தின் ஈருந்த பூரண கூட்டத்திலே ஆங்கிலேயே வேதசாட்சிகள் நாற்பதின்மருக்கும் புனிதர் பட்டம் அருளுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருப்பட்டம் அருளுவதற்கான திருச்சடங்கு வருகிற இலையுதிர்காலத்திலதே — அநேகமாக வருகிற ஐப்பசி மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறலாமென நம்பப்படுகிறது. நெடுங்காலமாக எதிர்பார்க்கப்பட்ட சரித்திரபூர்வமான இச்சந்தர்ப்பத்திலே ரூமைநகரில் சமூகமளிக்குமாறு ஆங்கிலேய மக்களிடையில் பெருஆயத்தங்கள் நடைபெறத்தொடங்கியிருக்கின்றன.

## கிறீஸ்தவ சபைகளின் பொருளாதார சேவை

கிறீஸ்தவ சபைகள் நாட்டு மக்களின் ஆத்தும இரட்சணியத்துக்குமாத்திரமல்ல, இவ்வுலகசீவிய கஷ்டங்களைக் குறைப்பதிலும் சிரத்தை கொள்ள வேண்டுமென்ற ஏகோபித்த முடிவு சென்ற வாரம் கொழும்பில் நடந்த கிறீஸ்தவசபைகளின் ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கத்தோலிக்கரின் சார்பில் கொழும்புத் துணைமேற்றிராணியார் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளார் இக்கூட்டத்தில் சமுகம் அளித்திருந்தார். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கிறீஸ்தவ சபைகள் செய்யும் முயற்சிகளுக்கு பணஉதவி உலக கிறீஸ்தவ சபைகளின் ஸ்தாபனம் தப்பாமல் ஏராளமாக அளிக்குமென அச்சபையின் பிரதிநிதியாக விஜயம்செய்திருந்த வண. பேர்க்கின்ஸ் பாதிரியார் வாக்களித்தார். இவ்வாறு இந்தோனிசியாவிலும், பிலிப்பையினிலும் ஏற்கனவே நடந்திருப்பதை எடுத்துக்காட்டி இந்நாட்டிலுள்ள கிறீஸ்தவசபைகள் யாவும் ஒன்றித்து நாட்டின் முன்னேற்றத்துக்குத் திட்டமிட்டு வேலைசெய்ய அவர் தூண்டினார். அக்கூட்டத்தில், இலங்கை அரசாங்க பொருளாதார திட்டஇலாகாவில் உயர் உத்தியோகஸ்தர் ஒருவரான திரு. வெலிக்கல அரசாங்க இலாகாவின் திட்டங்களை விளக்கினர்;

* * *

## நாடோடிகளின் நிலைமை அகற்றப்பட வேண்டும்

உலகில் எல்லாத் தேசங்களிலும் "ஜிப்சிஸ்" எனப் பொதுவாக அழைக்கப்படும் நாடோடிகள் இருக்கின்றனர்; உலகில் அவர்களின் தொகை நாலுஅல்லது ஐந்து கோடிஎன மதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களோ எழுத, எண்ண, வாசிக்கத்தெரியாதவர்கள். வீடென்பது அவர்களுக்கு இல்லை. அலைந்துலைந்து கிடைப்பதை உண்டு மகிழ்ந்து காலம் போக்குகின்றவர்கள். இவர்களை உண்மையான நாகரிக வாழ்க்கையைச் சுவைக்கவும் தற்காலத் தொழில் துறைகளில் அவர்கள் ஈடுபடச் செய்யவும் சகலஅரசாங்கங்களும் முயற்சிக்க வேண்டுமென்று வத்திக்கானில் அண்மையில் நீதியும், சமாதானமும் கண்காணிக்க நிறுவப்பட்டுள்ள குழுவினர் விண்ணப்பித்திருக்கின்றனர்.

---

● இங்கிலாந்தில் சறேஎனுமிடத்திலுள்ள சம்மிக்கேல் விடுதிச்சாலையில் வசித்திருந்த செல்வி எதெல் கொன்ஸ்ரான்ஸ்எனும் சீமாட்டி தனது மரணசாதனத்திலே லிவர்ப்பூல் நகரிலுள்ள யேசுசபைத்தியானபோதக இல்லமாகிய லொயலா மண்டபத்திற்கென 23,000 பவுண் பெறுமதியான தனது சொத்து முழுவதையும் விட்டுச் சென்றிருக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — சித்திரை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞாயிறு | பாஸ்கா 3–ம் ஞாயிறு | [வெ] |
| 13 | திங்கள் | தினப்பூசை | [வெ] |
| 14 | செவ்வாய் | புனித யஸ்ரின் | [சி] |
| 15 | புதன் | தினப்பூசை | [வெ] |
| 16 | வியாழன் | ,, | [வெ] |
| 17 | வெள்ளி | ,, | [வெ] |
| 18 | சனி | ,, | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# காணிக்கை

பெரிய சனிக்கிழமையன்று மேற்றிராசன ஆலயத்தில் நடைபெற்ற பாஸ்கா திருவிழிப்புச் சடங்குகளின்போது மக்கள் தங்கள் காணிக்கைப் பொருள்களைத் தேவாலயத்துக்குக் கொண்டுவந்து ஒப்புக்கொடுத்த நிகழ்ச்சியும் இடம்பெற்றது. கிறிஸ்துவின் பலியோடு ஒன்றுசேர்த்து தமது காணிக்கைப் பொருள்களையும் ஒப்புக்கொடுத்த இந்த அழகிய திருச்சடங்கு ஒரு பேருண்மையை எம் மனதில் ஊன்றி நிலைபெறச்செய்யக் கூடியதாயிருந்தது. அதாவது பலியில் எம் காணிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதாகும். இறைவனை வழிபடவரும் அடியார்கள் காணிக்கையுடன் வருவதுதான் பொருத்தமானது. இறைவனிடமிருந்து நாம் பல அருங்கொடைகளைப் பெறுகின்றோம். அவருக்கு வழிபாடுசெய்ய வருவோர் வெறுங்கையுடன் வருவது பொருந்தாது.

ஆனால், நாம் காண்பதென்ன? ஞாயிறு பூசையில் காணிக்கை சேர்க்கப்படும்போது ஆலயத்தில் பிரசன்னமாயிருப்போரில் கால்வாசிப்பேர்மட்டும் காணிக்கை கொடுத்தால் அது பார்ப்பதற்குத் தன்னும் அழகா? காணிக்கை போடாதவர்களில் பெரும்பாலானோர் வழியில்லாத காரணத்தால் அவ்வாறு போடாமல் விடுபவர்கள் அல்ல. அலட்சிய மனோபாவத்தின்காரணமாகத்தான்.

காணிக்கையைப்பற்றிக் கூறும்போது இன்னொரு விடயமும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஒரு விகடத்துணுக்கில் காணப்பட்டதுபோல வேறொன்றுக்கும் செலவிடப்போதாத ஒரு நாணயத்தைக் காணிக்கை என்று கோயிலில்போடுவது இறைவனையும் அவருக்குச் செலுத்தப்படும் பலியையும் அலட்சியமாக, இளப்பமாகக் கருதுகிறோம் என்றல்லவா ஆகின்றது. "கடவுளுக்குத் தெரியும் எங்கள் நிலைமை" என்று சிலர் கூறக்கூடும். மற்றெல்லாச் செலவுகளுக்கும் போக மீதியாக இருப்பதைத்தான் கோயிலுக்குப் போடுவது, தானதருமம் செய்வதுஎன்று வழக்கப்படுத்தியிருப்போர் கூற்று இது. பொருள்மட்டும் நாம் இறைவனுக்குக் கொண்டுவரும் காணிக்கையன்று. அவரது மகிமைக்காகச் செய்யப்பட்ட நற்கிருத்தியங்கள், ஒறுத்தல்கள், பிறர்சிநேகச் செயல்களெல்லாம் காணிக்கையே என்பதை உணர்ந்தோர் அது எத்தகைய மனத்துடன் செலுத்தப்படவேண்டும் என்பதை மறவார். அன்பிற்குரிய ஒரு நண்பருக்கு பரிசளிக்கும்போது அதை எத்தகைய சிந்தனையோடு ஆயத்தஞ் செய்வோமோ, அதே சிந்தனையுடன் கருத்துடன்தான் இறைவனது காணிக்கையை ஆயத்தஞ்செய்யவும் வேண்டும், அளிக்கவும் வேண்டும். எவ்வளவு கஷ்டத்துடன் அது கொடுக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் பெறுமதி உயர்கின்றது. விதவைப்பெண்ணின் காணிக்கை குறித்து நம்மாண்டவர் கூறியவார்த்தைகளே இதற்குச் சான்று.

## ஜனாதிபதி நிக்சனின் சகோதரர் பாப்பரசரைச் சந்தித்தார்

அமெரிக்க ஐக்கியநாட்டு ஜனாதிபதி திரு. றிச்சட் நிக்சனின் சகோதரர் திரு. டொனல்ட் சென்றவாரம் பரிசுத்த தந்தையை வத்திக்கானுக்குச்சென்று பேட்டிகண்டார். இருவரும் பலநிமிடங்களாக அளவளாவிக் கொண்டனர்; பேட்டி முடிந்ததும் திரு. டொனல்ட் நிச்சன் "சமாதானம் உலகுக்கு எவ்வளவு அவசியமாய்இருக்கின்றது என்பதைப்பற்றி உரையாடினோம்; இதை எனது சகோதரர் ஜனாதிபதிக்கு வற்புறுத்துமாறு பரி. தந்தை என்னைக் கேட்டுக்கொண்டார்" என்றார்

# "பிதாவே! என்மனதின்படி யல்ல உமது சித்தத்தின்படி ஆகட்டும்."

(பரி. மத். 22-ம் அதி. 42-ம் வச.)

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்றெல்லாம் உலகம் மக்களை ஏமாற்றுகிறது. நம் பரலோக பிதா மக்களைப் படைத்தபோதே பூரண சுதந்திரராகவும், சமத்துவம் உடையோராகவும், பரலோகபிதாவின் பிள்ளைகள் என்ற மட்டில், சகோதரராகவும் அமைத்துவிட்டார். மண்ணினால் உருவான மனிதன் இறைவனின் ஆவியைப் பெற்றபோதே, அவன் விண்ணரசுக்குரிய மகத்தான அந்தஸ்த்தைப் பெறுக்கொண்டான். ஆயின் அவனுடைய மனிதசுபாவம் மண்ணுலகைப் படம்பிடித்து, சுயசித்தப்படி நடந்து ஏமாற்றம் அடைகிறான். இறைவனின் சாயலான ஆன்மாவோ இறைவனைப் படம்பிடித்து அவர் சித்தப்படி நடந்து, விண்ணரசின் சுதந்திரவாளியாக விரும்புகிறது. இங்கே ஆன்மாவுக்கும் சரீரத்துக்கும் போராட்டம் உண்டாகிறது. சுயசித்தத்தை அடக்கி, இறைவன் சித்தப்படி நடக்க விரும்பும் ஆன்மாவுக்கு இறைவனின் உதவி தேவைப்படுகிறது. மனிதன் தன் சுய சித்தத்தின் வேரறுத்து, தெய்வ சித்தத்துக்கு அமையும்போது, மனிதனது மண்ணுடலே, பொன்னுடலாக மாறி கிறிஸ்துவின் உத்தானத்தில் பங்கடையச்செய்கிறது. இவ்வாறே புனிதரும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெய்வசித்தத்துக்கு அமைந்து, இறைவன் தமக்கு அமைத்த அமைவின்படி வாழ்ந்து கிறிஸ்துவின் உத்தானத்தில் பங்குபற்ற வேண்டியிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ சீவியம் இவ்வுலகில் மாத்திரம் வாழ்வதல்ல. இவ்வுலகத் தயாரிப்பே, மறுவுலக சீவியத்துக்கு அச்சாரமாக வேண்டியது. இதன்படியே இறைமக்களின் தெய்வ சித்தத்துக்கு அமைந்தோர் ஆதிதொட்டு இறைவனால் தமக்கு நியமிக்கப்பட்ட அழைப்புகளை இறைவன் சித்தம் என ஏற்றனர். பல இன்னல்கள் மத்தியில் மேற்கெண்டனர். இறைவனுடைய கரம் அவர்களுடனிருந்தது. இறைவன் பலத்தால் வெற்றிகண்டனர். பிதாப்பிதாவாகிய ஆபிரகாம் இறைவனால் அழைப்புப் பெற்று, அவர் காட்டிய பிரதேசத்தில் வாழ்ந்து, வாக்குத்தத்தத்தின் பிதாவானார். அப்படியே பிதாப்பிதாவாகிய மோசேஸ் தெய்வ அழைப்புக்குப் பணிந்து, கொடுங்கோலனாகிய பார்வோனுடன் வாதாடி, மீட்கப்பட்ட இஸ்ராயேல் மக்களின் தலைவரானார். பழைய புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தியாகிய நம் தேவஅன்னை தெய்வசித்தத்துக்குப் பணிந்ததில் யாவருக்கும் மேல்வரிச்சட்டமானாள்.

தெய்வசித்தத்துக்குப்பணிவதென்றால், முதலில் இறைவனில் பூரண நம்பிக்கை உண்டாகவேண்டும். இந்நம்பிக்கையைப்பற்றி, இசையாஸ் தீர்க்கதரிசி, (இசை. 40ஆம் அதி. 30ஆம் 31ஆம் வச.) தமது ஆகமத்தில், "கத்தரில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் புதுப்பெலனை அடைகிறார்கள். கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்துக்கொண்டு எழும்புவார்கள். அவர்கள் பேலும் மேலும் ஓடினாலும், இளைப்படையமாட்டார்கள், சோர்ந்துபோகவும் மாட்டார்கள்." என்று நம்பிக்கையின் பலத்தை அழகாக விளக்குகிறார். இவ்வித நம்பிக்கை தவிர்க்கமுடியாத சோதனையிலும் மனிதனை இறைவன் சித்தத்திற்கும் பணியவைக்கிறது.

நமது தாவீது அரசரும் எப்போதும் தெய்வசித்தத்துக்கு அமையக் காத்திருந்தார். என்று அவர் பாடிய 42ஆம் சங்கீதம் 10ஆம் வசனம் நமக்கு விளக்குகிறது. "நீரே என் தேவன். உமது சித்தத்தை நிறைவேற்ற எனக்குப் படிப்பித்தருளும்" என்று வேண்டுதல் செய்வதோடு, 110-ம் சங். 45-ம் வசனத்தில், நான் ஆசித்துத் தேடுவதெல்லாம், உமது சித்தமாகவே இருந்தால், எனது பாதங்கள் சுதந்திரமாக முன்னேறிச் செல்லும் என்று தமது மனப்பான்மையை வெளிப்படுத்துகிறார். சகல புனிதருக்கும், ஆம், சகல விசுவாசிகளுக்கும் ஆசிரியரான நம் அன்பின் இரட்சகர் ஜெத்சமனி தோட்டத்தில் செபித்த செபமே நமது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கிறது. "பிதாவே! கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலட்டும். ஆயினும், என் மனதின்படியல்ல, உமது சித்தத்தின்படியாகட்டும்" என்றார். கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய வாக்கியம் இதுவல்லவா? இவ்விடம் நம் அன்பின் தெய்வம் நமக்குப் போதித்தருளிய வாக்கியமும் நமக்கு நற்சிந்தனையை உண்டாக்குகிறது. பரி. மத். 7-ம் அதி. 13–ம்,14–ம் வச. "ஒடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். ஏனெனில் கேட்டுக்குச் செல்லும் பாதை அகன்றதும், அதன் வழி விசாலமுமாய் இருக்கின்றது. அதில் பிரவேசிப்பவர்களும் அனேகர். ஜீவியத்துக்குச் செல்லும் வாசல், ஒடுக்கமும் அதன் வழி எவ்வளவோ நெருக்கமுமாய் இருக்கின்றது. அதைக் கண்டு பிடிப்பவர்களும் சொற்பப் பேர் என்கிறார். கிறிஸ்துவைப் பின்பற்றிய அப்போஸ்தலர் ஒவ்வொருவரும் தெய்வ சித்தத்துக்குப் பணிந்ததனால் அல்லவா, கிறீஸ்துவைக் கொன்ற யூதர் மத்தியில், வேதவிரோதிகள் இடையில், எதிர்ப்புகள், ஆக்கிரமிப்புகள், அடிகள், விலங்குகள், மறியல், பசி, பட்டினி யாவற்றிலும், யூதரின் பழைய கொள்கைகளை அழித்து, பழைய புதிய உடன்படிக்கைகளை ஒன்றுபடுத்தி, கிறீஸ்துவின் திருச்சபையை நிலைநாட்டி அதன் வளர்ச்சிக்காகத் தம்மையே, தம்முயிரையே தியாகம் செய்து இரத்தம் சிந்தி, இன்று கிறீஸ்துவின் அரசை உலகின் ஒளியாக, உலகின் பொதுச் சுதந்திர செல்வமாக ஆக்கிவைத்துப் போய் இருக்கின்றனர். தொடர்ந்து வரும் அப்போஸ்தலரும் இறைவன் சித்தத்துக்கு அடிபணிந்து, உலகின் தீவிர முன்னேற்றங்களைச் சமாளித்து, மக்களை விண்ணரசின் பாதையில் இட்டுச்சென்று, நித்திய சம்பாவனைக்குப் பாத்திரர் ஆக்குகின்றனர் என்றால், நாம் ஏன் இன்று அப்பாதையைப் பின்பற்றக் கூடாது. தெய்வ சித்தப் பாதையைக் கடைப் பிடித்தால், என்னைப் பெலப்படுத்துகிறவரைக் கொண்டு என்னால் எல்லாம் செய்ய முடியும்" என்று கூறுவோம்,

— நாதன்

## 60 வயோதிப ஜோடிகள் செய்த விவாக வாக்குத்தத்தம்

சென்றவாரம் கொழும்பு அதிமேற்றிராசன ஆசனக் கோவிலில் அறுபதுக்கு மேற்பட்ட வயோதிபஜோடிகள் பீடத்தின் பாதத்தைஅண்டி தாம் முன்செய்த மெய்விவாகவாக்குத்தத்தத்தைப்புதிப்பித்த சடங்கு பார்த்தோர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அன்றுதினம் கொட்டாஞ்சேனை விசாரணைப்பங்கில் உலக கிறீஸ்தவ சீவிய சமுதாயத்தைச் சேர்ந்த சங்கத்தினர் மெய்விவாக வாக்குத்தத்தங்களைப் பகிரங்கமாகப் புதுப்பித்து உத்தம கிறீஸ்தவ குடும்பவாழ்க்கையை நடாத்திவர மீளவும் வாக்குறுதி கொடுத்தனர். ஜோடிகளைப் பீடத்தின் பாதத்தண்டை அவர்களதுபிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கூட்டிச் சென்றனர். சில ஜோடிகளைக் கைத்தாபரத்துடனே கூட்டிச்செல்ல வேண்டியிருந்தது. வயோதிபர் தத்தம்வாழ்க்கைத்துணைவருக்குப் பிரமாணிக்கமாக நடக்கச் சம்மதம் கொடுத்த தொனியின் உச்சாரணம் அதைக் கேட்டோர்காதில் இன்னும் ஒலித்துக்கொண்டேவிருக்கின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆ சித்திரைமீ 11ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org